வேண்டி, இங்கு விரிவாக விவாதிக்க வேண்டிய அவசியம் இருப்பதால், அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[காங்கிரஸ் (இ) உறுப்பினர் திரு. என். எஸ். வி. சித்தன் உள்ளே நுழைந்தார்.]

2. ஒழுங்குப் பிரச்னைகள்—தொடர்ச்சி

(ஆ) வெளிநடப்புச் செய்தவர்கள் அவைக்கு வருதல்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நான் ஒரு ஒழுங்குப் பிரச்னையைக் கிளப்ப விரும்புகிறேன். எதிர்க்கட்சிகள் பொதுவாக வெளிநடப்புச் செய்வது ஜனநாயகத்தில் அளிக்கப்பட்டிருக்கிற உரிமை. ஆனால் போனவுடனேயே ஐந்து, ஐந்து நிமிடங்கள் முடிவதற்குள்ளாகவே திரும்ப வந்து விடுவார்களானால் ஒரு நாளைக்கு எவ்வளவு முறை வேண்டுமானாலும் எதிர்க்கட்சிகள் வெளிநடப்புச் செய்வதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படுகிறது. பொதுவாக ஒருமுறை வெளிநடப்புச் செய்கிறபோது அன்றைய சபை நடவடிக்கைகளில் கலந்து கொள்வதில்லை என்ற அடிப்படையில் தான், எதிர்க்கட்சிகள் வெளிநடப்புச் செய்வது வழக்கம். நான் தங்களைக் கேட்டுக் கொள்வது, ஒரு குறைந்தபட்ச காலநேரமாவது அதாவது அரை மணி நேரம் அல்லது ஒரு மணி நேரம் மினிமம் டைமாவது என்று வெளிநடப்பு செய்வது என்ற முறையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. என். எஸ். வி. சித்தன்** : தலைவர் அவர்களே, வெளிநடப்புச் செய்வது என்பது எதிர்க்கட்சிகளுக்கு ஜனநாயகத்தில் அளிக்கப்பட்டிருக்கிற உரிமை. (குறுக்கீடுகள்) நானும் அதுபோல் பேசவேண்டி வரும். அமைச்சர் அவர்கள் இந்த அவையின் மரபையும் கண்ணியத்தையும் காக்க வேண்டும். நாங்கள் ஒரு குறிப்பிட்ட பிரச்னைக்காக, அதை இங்கே எழுப்ப முடியவில்லை என்பதற்காக எங்கள் மனவருத்தத்தை வெளிப்படுத்த நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம். மீண்டும் அவைக்குள்ளே வருகிறோம் என்றால் ஜனநாயகத்தில் நாங்கள் ஆற்ற வேண்டிய கடமைகள் இருக்கின்றன. மிக முக்கியமான பிரச்னையாக இருப்பதால் வந்திருக்கிறோமே தவிர கேலியும் கிண்டலுமாக மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் பேசுவது என்பதை நீங்கள் எப்படி ஏற்றுக்கொள்கிறீர்கள். சபைக் குறிப்பில் அதை ஏற்றப்போகிறீர்களா என்று தெரியவில்லை. தயவுசெய்து நீங்கள் தீர்ப்பளிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசாங்கத்தை எதிர்த்து வெளிநடப்புச் செய்திருக்கிறீர்கள். இப்போது அரசாங்கத்தை திர்த்து அல்ல, என்னை எதிர்த்து வெளிநடப்பு செய்திருக்கிறீர்கள். அகில இந்தியாவில் நீங்கள் எப்படி உதாரணமாக இருக்கப் போகிறீர்கள் என்று தெரியவில்லை. சபாநாயகரை எதிர்த்து பாராளுமன்றத்தில் கூட வெளிநடப்புச் செய்வதில்லை. எந்தக் கட்சியும் செய்யவில்லை. இங்கேதான் புதிய மரபுகளை கற்றுக் கொடுத்துக்கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு) எனக்கு பாராளுமன்ற அனுபவம் நிறைய உண்டு. (குறுக்கீடு) அதுபற்றி அலுவல் ஆய்வுக் குழு முடிவெடுக்கும் அல்லது அவை முடிவு எடுக்கும்.

திரு. துரைமுருகன் : சபாநாயகர் அவர்களே, * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை அவைக்குறிப்பில் ஏற்றாதீர்கள்.

திரு. துரைமுருகன் : * * *

4. ஒத்திவைப்புத் தீர்மானம்—தொடர்ச்சி.

*திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் மேலும் ஒரு கல்லூரியில் இன்றைக்கு விரும்பத்தகாத நிகழ்ச்சி நடந்திருப்பது பற்றி, நாம் மகிழக்கூடாத ஒரு பிரச்னை பற்றி மீண்டும் இந்த அவையில் பேசவேண்டிய ஒரு நிலை ஏற்பட்டிருப்பதுபற்றி உள்ளபடியே வருத்தப்படுகிறேன். மதுரை மாவட்டத்தில் மேலூரில், பொருளாதாரத் துறையில் மிகவும் பிற்படுத்தப்பட்ட அந்தப் பகுதியில் ஒரு கலைக் கல்லூரி தொடங்க வேண்டும் என்ற முயற்சியை இதற்கு முன் இருந்த அரசாங்கம் எடுத்து அங்குள்ள மக்களிடம் நன்கொடை பெற்றும் நிறைவு பெறாமல் 15 லட்சம் ரூபாயை அரசே கொடுத்து அங்கே கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. அந்தக் கல்லூரி கடந்த—ஒரு மாதகாலமாக மூடப்பட்டு அங்கே பயில்கிற மாணவர்கள் இந்த ஆண்டு தேர்வு எழுதுவார்களா, கல்லூரி எப்போது தொடங்கும் என்று அங்கு படிக்கும் மாணவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாக இருக்கிற நிலை இன்று ஏற்பட்டிருப்பது குறித்து இந்த மன்றத்தில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் கவலைக்கு ஆளாகியிருக்கிறார்கள்.

---

* மாண்புமிகு பேரவைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.